# 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் செய்ய முடியாததை 3 ஆண்டு கழக ஆட்சியில் செய்து சாதனை!

# சுகாதாரம், கல்வி, வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முதலிடம்!

## ‘நிதிஆயோக்’ அறிக்கையைச் சுட்டிக்காட்டி - டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. “சன் நியூஸ்” தொலைக்காட்சிக்குப் பேட்டி!

சென்னை, ஜுலை 22-

**“பத்தாண்டு அ.தி.மு.க. ஆட்சியில் செய்ய முடியாததை 3 ஆண்டு கழக ஆட்சியில் செய்து சுகாதாரம், கல்வி, வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது” என்று சட்டமன்ற கழக உறுப்பினர் டாக்டர்.எழிலன் நாகநாதன் கூறியுள்ளார்.**

**சன் நியூஸ் தொலைக்காட்சியில் செய்திக்கு அப்பால் ‘சிறிதினும் பெரிது கேள்’ நிகழ்ச்சியில் கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் நா.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அளித்த பேட்டி வருமாறு:**




**செய்தியாளர்: நிதி ஆயோக்கில் நிலையான வளர்ச்சி இலக்குகள் (sustainable developments goals) தொடர்பான அறிக்கையில் தமிழ்நாடு எந்தெந்தத் துறைகளில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது?**

**டாக்டர் நா. எழிலன்:** அ.தி.மு.க. ஆட்சி 2011 இல் இருந்து இருக்கிறாங்க. 2019-2020 இல் முதல் அறிக்கை வரும் போது தமிழ்நாடு 66 வது இடத்தில் இருந்தாங்க. பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட மாடல் அரசு ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு 2021, இப்போது 2023 இல் இருந்து 2024.

அ.தி.மு.க. ஆட்சி 10 வருடத்தில் 61 வது இடத்தில் இருந்தது. இப்போது மூன்று வருடம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி காலத்தில் 66 புள்ளியில் இருந்து 76 புள்ளிகள் இடத்தில் வந்து நிற்கிறார் கள். அப்போது கிட்டத்தட்ட ஒரு 12 புள்ளி உயர்த்தி நிற்பது மூன்று ஆண்டு களில் பெரும் சாதனை.

இந்த புள்ளிகள் வந்து எதோட புள்ளிகள் என்று பார்த்தால் கல்வி, நிர்வாகம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, மருத்துவத்துறை என்று பல்வேறு அமைப்பு ஒரு 16 இன்டிகேட்ஸ் கொடுத்து இருக்கிறார்கள். இதில் ஒவ்வொரு இன்டிகேட் ஸிலும்ஒவ்வொரு துறையி லும் அந்த அரசு எப்படி செயல்பட்டு இருக்கிறது என்று ஒரு ரேங்க் சிஸ்டம் கொடுத்து வரவேற்கிறார்கள்.

அப்போது தமிழ்நாடு பிரண்ட் ரென்னன்ர் முதலிடத்தில் இருக்கிறது. அதாவது டாப் மோஸ்ட் ரேங்கில் கிட்டத்தட்ட 16 அளவுகோலில் 15 அளவுகோலில் நாம் பிரண்ட் ரன்னராக தான் இருக்கிறோம்.

**செய்தியாளர்: இதில் முக்கியமானது வறுமை ஒழிப்பு திட்டத்திலும் இந்த கால நிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திட்டத்திலும் தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல் படுத்துகிறது என்று சொன்னார் கள். இந்த சாதனையை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்.?**


**டாக்டர் நா. எழிலன்:** கல்வியை மேம்பாட்டு செய்வதற்கான வழி முறைகளை செய்துக்கிட்டு இருக்கிறோம். கல்வி மட்டுமல்ல; உயர் கல்வியிலும் நாம் சீர்திருத்த நடவடிக்கைகளை கொண்டு வந்து இருக்கிறோம். இவை யெல்லாம் ஒருங்கிணைந்து பார்க்கும் போது வறுமை ஒழிப்பு, ஒரு மெல்டி டேமெண்ட்ஸ் புராபார்ட்டி என்றால் ஒரு நாளைக்கு எவ்வளவு உணவு என்று கேலரி மட்டும் கவுண்ட் செய்யாமல், அந்த மகிழ்ச்சியோட தன்மை எந்த மாதிரியான உணவு உட்கொள்கிறார்கள். என்ன மாதிரியான காற்றினை சுவாசிக் கிறார்கள். அவர்களுடைய வீட்டின் அளவுகோல் எப்படி இருக்கிறது.? அவர்கள் மருத்துவத் துறைக்கு எப்படி போவதற்கான ஆசிஸ் பெல்ட் எப்படி இருக்கு, இவையெல்லாம் மெல்டி மேமெண்ட்ஸ் இன்டக்ஸ் பார்த்து தமிழ்நாட்டில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள் 2.2 சதவிகிதம் தான் இருக்கி றார்கள். இது ஒரு பெரும் சாதனை வறுமை ஒழிப்பு திட்டத்தில்.

அந்த 2.2 சதவிகிதம் கூட முழு மையாக தீர்க்கத்தான் ‘தாயு மானவர்’ திட்டத்தை நமது தமிழ்நாட்டு முதல்வர் இப்போது அறிவித்து இருக்கிறார் இது ஒன்று.

காலநிலைக்கான ஒரு தொலைநோக்கு கொள்கையோடு தான் தமிழ்நாட்டு முதல்வரின் வழிகாட்டுதலோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனால் தான் கிளை மேட்டிக் சமிட் பற்றி நிறைய ஆய்வாளர்களை கொண்டு வந்து அரசின் இ-கவர்னர்ஸ் சென்டர் என்ற ஒரு கான்சப்ட்டை ஒருவாக்கி கிரின் கார்டரஸை அதிகரிப்பது. காற்று பகுதியில் காற்றில் ஒரு மாநிலத்தின் சத விகிதத்தை உயர்த்துவது; மரங்கள் நடுவது போன்ற விசயங்கள், இமிஷன் கட் பன்ற விஷயங்கள், தொழி ற் சாலைகளின் மாசு கட்டுப் படுத்துகின்ற விஷ யங்கள் பற்றி எல்லாம் தமிழ்நாட்டு முதல்வர் வழி காட்டுதல் படி நடை பெற்றுள்ளது. இதற்கெல்லாம் 81 பாயிண்ட்ஸ் கொடுத்து இருக்கிறார்கள்.

இவை மட்டுமல்ல; நிதி ஆயோக், இரண்டு விஷ யங்கள் செய்து இருக்கிறார் கள். அதனை அவர்கள் திருத் திக் கொள்ள வேண்டும். என்ன வென்றால் தமிழ் நாடு ஒரு மிகப் பெரிய மாநிலம். கிட்டத்தட்ட ஒரு 8 கோடி ஜனத்தொகை கொண்ட மாநிலம். இதனை எதனோடு கிளப் செய்கிறார்கள் என்றால் சிறிய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களாக இருக்கின்ற மாநிலங் களோடு இதனை சேர்த்து விடுகிறார்கள்.

அப்போது நிதி ஆயோக், இந்த தர வரிசையில் என்ன செய்ய வேண்டும் என்றால், பெரிய மாநிலங்கள்; சிறிய மாநிலங்கள் என்று வகைப்படுத்த வேண்டும். அப்போது சிறிய மாநிலங்கள் என்று பார்த்தால் தமிழ்நாட்டிற்கு மேலே இருக்கிறது என்று பார்த்தால் கேரளா, அதற்கு மேலே இருப்பது உத்தரகாண்ட். இவை தமிழ்நாட்டின் கால் பகுதிக்குக் கூட வராது. ஜனத்தொகையிலும் சரி, எரியா ஸ்பேர் மீட்டர்ஸ் கணக்கிலும் சரி, அப்போது பெரிய மாநிலங்கள் நமது தமிழ்நாட்டினை எதனோடு ஒப்பிட வேண்டும் என்றால் மகாராஷ்ட்ரா, குஜராத், மத்தியபிரதேஷ், உத்தரப்பிரதேஷ், கர்நாடகா இந்த மாநிலங்களோடு தான் கம்பேர் செய்யவேண்டும். அப்போது அந்த மாநிலத் தோடு ஒப்பீடு செய்யும் போது தமிழ்நாடு தான் நம்பர் ஒன் ஸ்டேட்ஸ் ஆக இருக்கிறது.



### Status report

Tamil Nadu's score in eleven sustainable development goals, according to a NITI Aayog report (2023-24), has been higher than the national average. For two of the goals, the State's indicators have been on a par with the national average

| Goal No. | Sustainable Development Goals | Tamil Nadu (out of 100) | National Average (out of 100) |
|---|---|---|---|
| 1 | No poverty | 92 | 72 |
| 2 | Zero hunger | 75 | 52 |
| 3 | Good health and well being | 77 | 77 |
| 4 | Quality education | 76 | 61 |
| 5 | Gender equality | 53 | 49 |
| 6 | Clean water and sanitation | 90 | 89 |
| 7 | Affordable and clean energy | 100 | 96 |
| 8 | Decent work and economic growth | 81 | 68 |
| 9 | Industry, Innovation and Infrastructure | 67 | 61 |
| 10 | Reduced Inequalities | 76 | 65 |
| 11 | Sustainable cities and communities | 81 | 83 |
| 12 | Responsible consumption and production | 78 | 78 |
| 13 | Climate action | 81 | 67 |
| 14 | Life below water | 61 | * |
| 15 | Life on land | 72 | 75 |
| 16 | Peace justice, and strong institutions | 78 | 74 |

Note: The Index does not measure indicators of SDG 17 - 'Partnership for the Goals' owing to unavailability of suitable data at the State/Union Territory level.

சிறிய மாநிலங்களோடு தரவரிசையை தனியாக கொடுக்க வேண்டும். இதனை நிதி ஆயோக் திருத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது விஷயம்என்னவென்றால் தடுப்பூசி போடுவதின் (vaccine coverage) அடைப் படையில் 85 சதவிகிதம் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டின் தரவு பார்தோம் என்றால் உண்மையி லேயே குழந்தை கள் தடுப்பூசி எவ்வளவு போட்டு இருக்கிறார்கள் என்றால் 97 சதவிகிதம். இதனை திருத்தச் சொல்ல நம்முடைய டைரக்ட ரேட் நிதி ஆயோக்கிற்கு தொடர்ந்து கடிதம் எழுதிக் கொண்டே இருக்கி றார்கள். அதனையும் மாற்றிக் கொள்ள வேண்டும். இவை இரண்டை யும் திருத்தம் கொண்டு வந்தால் தமிழ்நாடு எல்லாவற்றிலும் நம்பர் ஒன் ஸ்டேட்ஸ் ஆக இருக்கும்.

**செய்தியாளர்:இந்த நிதி ஆயோக் தரவரிசையில் சுகாதாரத் துறையில் தமிழ்நாடு எந்த இடத்தில் இருக்கிறது. அதனுடைய மதிப் பெண்களும் எப்படி இருக்கிறது.?**

**டாக்டர் நா.எழிலன்:** தமிழ்நாடு சமூக நீதி கொள்கை எப்படி இருக்கிறது என்றால் மிகவும் வலிமையாக இருப்பதினால் தான் சுகாதாரத் துறையானது கல்வியிலும் சரி, மருத்துவ சேவை யிலும் சரி மிக உயர்ந்த வளர்ச்சியை நாம் எட்டி இருக்கிறோம். மருத்துவக் கட்டு மானங்களில் இருந்து ஆரம்பித்து கிட்டத்தட்ட மருத்துவர்களாக இருக்கட்டும்., செவிலியர் களாக இருக்கட்டும் அவர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பை அவர்களுக்கு அளித்து, அவர்கள் செயல்படுவதின் காரணத்தினால் தான் இன்றைக்கு எல்லா வகையான குறியீடு, குழந்தை இறப்புக்கான சதவிகிதம் கிட்டத்தட்ட 8க்கு கிட்டே வந்துவிட்டோம். ஆயிரம் குழந்தைகளுக்கு, 5 வயதுக் குழந்தை களின் இறப்பு சதவிகிதம் ஆயிரம் குழந்தைகளுக்கு 13, பிறகு தாய் இறப்பு சதவிகிதம் ஒரு லட்சம் பிரசவத்தில் தாய் இறப்பு சதவிகிதம் 53. இவை யெல்லாம் வளர்ந்த நாடுகளுக்கான அளவு கோலின் அறிகுறிகள். ஒரு வளர்ந்த நாடுகள், ஐரோப்பிய நாடுகள் எப்படி இருக்கிறதோ அதே மாதிரியான இன்ட்ரஸ்டிஸ், பிற மாநிலங்கள், இப்போது உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்கள் எல்லாம் இந்தக் குறியீடுகள் ஆப்பிரிக்க நாடுகளுக்கு சமமாக இருக்கிறது. நம்முடைய குறியீடுகள் ஐரோப்பிய நாடுகளுக்கு சமமாக இருக்கிறது. வளர்ந்த நாடுகளுக்கு சமமாக இருக்கிறது. தமிழ்நாட்டின் உள்ளடக்கிய வளர்ச்சி, திராவிடத் தன்மையோடு அரசாட்சி முறைகள் தான் இதற்கொரு நிலை யான காரணத்திற்கான வாய்ப்பாக அமைந் திருக்கிறது.

இவ்வாறு டாக்டர் நா.எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. பேட்டியளித்தார்.

---

# கழகத்தின் காவல் அரணாக முன்கள படை அணியாகத் திகழும் இளைஞர் அணி!

தி.மு.க. இளைஞரணி அப்படி என்னத்த தான் கழகத்திற்காக சாதித்துக் கொடுத்திருக்கி றது..?! அதோட துவக்க நாளுக்கு மட்டும் ஏன் இவ்ளோ பில்டப்பு... பாராட்டு... புலகாங்கிதம் எல்லாம்...

என்று தி.மு.க.வுக்குள் எப்பொழுதுமே குழப்பம் விளைவிக்க காத்திருக்கும் அந்த சங் கித் தம்பியின் பொச்சரிப்பு பதிவு ஒன்றைக் கண்டேன். அந்த தம்பிக்கு இதற்கான விளக் கம் அளித்து புரிய வைப்பது... கல்லில் நார் உரிக்கும் வீண் வேலையாக அமைந்து விடும் என்பது தெரியும்...

ஆனாலும் தி.மு.கழகத்தின் 20க்கும் மேற் பட்ட சார்பு அணிகளைச் சார்ந்தோர்... இளை ஞர்கள்... கட்சி சாராத உண்மையான நடுநி லையாளர்களுக்காகவேனும் இது பற்றிய தெளிவான விளக்கம் தர வேண்டிய அவசர அவசியம் கருதியே இந்த இளைஞரணியின் முக்கியத்திற்கான விளக்கப் பதிவு..!

ஒரு கட்டத்தில்... அதாவது 18 ஆண்டுகள் தி.மு.க.வில் குப்பை கொட்டி விட்டு எம்.ஜி.ஆர். பிரிந்தபோது, தி.மு.க.காரர்கள் வீட்டுக் குழந் தைகள், இளைஞர்களில் மிகப் பெரும்பான் மையானோரை அழைத்துச் சென்றார்.

72இல் வெளியேறிய எம்.ஜி.ஆ.ரோடு பெருந்தலைகள் யாரும் அதிக அளவில் செல் லவில்லை.... இன்னும் சொல்லப்போனால் நாவலர் நெடுஞ்செழியன் கூட அப்பொழுது செல்லவில்லை..!

ஆகவே தான் சிறு சலசலப்பு மட்டும் தான் இருக்கும் என்று தலைவர் கலைஞர் கருதிய தாக கண்ணதாசன் பதிவு செய்திருக்கின்றார்.

ஆனால் எம்.ஜி.ஆர்., தி.மு.க.விலிருந்து சென்ற இளைஞர் கூட்டம் தான் அவரை 77-இல் ஆட்சியில் அமர்த்தியது என்பதை தலை வர் கலைஞர் புரிந்து கொண்ட போது தான்....

அதுவரையிலும் தி.மு.கழகத்தின் அதிகா ரப்பூர்வ அமைப்பாக இல்லாமல்... ஆனாலும் இளைஞர்களை ஒருங்கிணைத்து இளைஞர் மன்றத்தை நடத்தி வந்த தளபதியார் அவர்க ளின் மிக மிக மிக அத்தியாவசிய பணியை.... கட்சிக்கான சேவையை உணர்ந்து கொண்ட வராக....

1980இல் தளபதியால் ஒருங்கிணைக் கப்பட்டிருந்த அந்த இளைஞர்களைக் கொண்டு.... அதிகாரப்பூர்வ சார்பு அணியாக இளைஞரணியை ஜுலை 20, 1980இல் துவக்கி வைத்தார்..!

அதன் பிறகு தளபதியாரின் தலைமையில் ராணுவ கட்டுப்பாட்டுடனும், மிடுக்குடனும், நேர்த்தியுடனும் செயல்படத் துவங்கிய தி.மு. கழக இளைஞரணியில் தமிழகம் முழுவ திலும் நகர, ஒன்றிய, கிளைக் கழகங்கள் வரையிலும் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு இளைஞர்கள் சேரத் துவங்கினர்...!

கிட்டத்தட்ட தாய் கழகத்திற்கு இணையான உறுப்பினர்களோடு அந்த இளைஞரணி தள பதியார் அவர்களால் கட்டமைக்கப்பட்ட பிறகு தான்...

வெல்லவே முடியாதவர் என்று இன்னமும் ஊடகங்களால் மக்களிடம் மூளைச்சலவை செய்யப்பட்ட எம்.ஜி. ஆர். 1986 உள்ளாட்சி தேர்தல்களில் வீழ்த்தப்பட்டு, கிட்டத்தட்ட 80 சதவிகித உள்ளாட்சி பிரதிநிகளை தி.மு.க. கைப்பற்றுகிறது...!

அதாவது... தலைவர் தளபதியார் தலை மையிலான இளைஞரணியால் தி.மு.க.வுக்கு கிடைத்த முதல் வெற்றிச் சாதனை இது தான்..!

இது தான் வரலாறு. தி.மு.க. இளைஞர் களை கூட்டிச் சென்று வெற்றி வாகை சூடிய எம்.ஜி.ஆர்.... அதே இளைஞர் கூட்டத்தை தளபதியார் அவர்கள் மீண்டும் கட்டமைத்ததால் வீழ்த்தப்படுகின்றார்..!

இதைக் கூட சில அரசியல் காழ்ப்புணர்வா ளர்கள் அதீத உருவகமாக பரிகசிக்கக் கூடும்....

ஆனால் 91இல் ஈழப் பிரச்சினைக்காக ஆட்சியை இழந்து... அதே ஈழப்புலிகள் ராஜீவ் கொலையால் ஏற்பட்ட அனுதாப அலையில் படு தோல்வி அடைந்த தி.மு. கழகம், மீண்டும் ஒரு பிளவை 1993ஆம் ஆண்டு சந்திக்க நேர்ந்தது.

எம் .ஜி.ஆர் பிரிந்த போது, பெருந்தலைகள் பெரிதாகச் செல்லாமல், இளைஞர்கள் மட்டும் சென்றதால் அவர் ஆட்சியைப் பிடித்தார்....

இத்தோடு தி.மு.க. கதை முடிந்தது என்று ஆகச் சிறந்த அரசியல் விமர்சகர் கள் எல்லாம் எழுதி தீர்த்துக் கொண்டிருந்த நிலையில்....

இரண்டாண்டுகள் கழித்து நடந்த 96 தேர்த லில் தி.மு.கழகம் அமோக வெற்றியைப் பெற்று.... இளைஞரணியைச் சேர்ந்த பெரும்பான்மை உறுப்பினர்கள் எம்.எல்.ஏக்களாகவும், சிலர் அமைச்சர்களாகவும் ஆகி சாதனை படைத்த னர்..!



**சௌமியன் வைத்தியநாதன்**
அமைப்பாளர்,
மயிலாடுதுறை மாவட்ட
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

இது இளைஞரணி வாயிலாக தி.மு.கழகத் திற்கு கிடைத்த இரண்டாவது பெரிய வெற்றி. கழகத்தைக் காத்து நின்றது தலைவர் தளபதி யார் தலைமையிலான அந்த ஆற்றல் மிகு இளை ஞரணி..!

பேரறிஞர் அண்ணா தலைமையில் கழ கம் பயணித்த பொழுது... அன்றைக்கு மிகப் பிரபல்யமாக இருந்த ஈ.வி.கே.சம்பத், கண் ணதாசன் போன்றோர் கழகத்தை விட்டு வெளியேறிய நிலையில்...

கழகம் ஒரு சிறு சேதாரத்தைக் கூட சந்திக் கவில்லை. காரணம், அன்றைக்கு அண்ணா வின் தளகர்த்தர்களாக இருந்த கலைஞர் உள் ளிட்ட மிகப் பெரும்பான்மையானவர்கள் இளைஞர்களாகவே இருந்தனர். அவர்கள் அனைவரும் அண்ணாவின் பின்னே அணி வகுத்த காரணத்தினாலேயே... அந்த மாபெ ரும் தலைவர்களின் பிரிவு தி.மு.க.வை கிஞ் சித்தும் காயப்படுத்தவில்லை...!

ஆனால் எம்.ஜி.ஆர் பிரிவின் போது இளை ஞர்கள் அவர் பின்னே அணி வகுத்த காரணத் தினாலேயே இன்றைக்கும் தமிழகத்தை ஆரி யத்திற்கு காட்டிக் கொடுத்து உண்டு கொழுக்கும்... அ.தி.மு.க.வும், பழனிச்சாமிக ளும் தமிழ்நாட்டிற்கு சாபக்கேடாக இருக்கும் நிலை உருவானது..!

இந்த ஒரே ஒரு வரலாற்றுப் பிழையைத்தான் தலைவர் கலைஞரால் உரு வாக்கப்பட்ட தலைவர் தளபதியாரின் தலை மையிலான... கிட்டத்தட்ட இன்றைக்கு முப்பது லட்சம் இளைஞர்கள் உறுப்பினர்களாக இருக் கக் கூடிய தி.மு.க.இளைஞரணி மிகத் தெளி வாக சரி செய்து... இன்றளவிலும் கழகத்தின் காவல் அரணாக... முன்களப் படை அணி யாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது..!

இன்றைக்கு அந்த அணி ஐந்து ஆண்டுக ளுக்கு முன்பாக திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பில் வந்த பிறகு.... மீண்டு மொரு (தொடர்) பத்தாண்டுகால அ.தி.மு.க.வின் அயோக்கிய... அடிமை ஆட்சியை...

அடித்து விரட்டி... மீண் டும் தலைவர் தளபதியார் தலைமையில் கழக ஆட்சி யினை அமைக்க பேருதவி யாக களம் கண்டு வெற்றி வாகை சூடியிருக்கின்றது..!

இதோ இன்றைக்கு ஒன் றிய அரசினை ஆரியம் முற் றும் முழுதாக பிடித்து ஆட்சி செய்கின்ற நிலையில்.... சனாதனம், இங்கே கோரத் தாண்டவத்தை ஆடிக் கொண்டிருக்கும் சூழலில்....

1950களில் அண்ணா வின் தம்பிகளால் தமிழ்நாடு முழுவதும் முன்னெடுக்கப் பட்ட, அந்த திராவிட இயக்க சித்தாந்த பயிற்சிப் பாசறைகள்...

இன்றைக்கு இளைஞரணியால்... அதன் ஆற்றல் மிகு செயலாளர் திரு உதயநிதி ஸ்டாலின் அவர்களின் மிக நுணுக்கமான, நேர்த்தியான திட்டமிடலால்...

தமிழகம் முழுவதும் திராவிட பயிற்சிப் பாச றைகள் பட்டி தொட்டியெங்கும் முன்னெடுக்கப்படுகின்றன. சித்தாந்த எதிரி களை வீழ்த்துவதற்கு... நம் இளைஞர்களை சித்தாந்த ரீதியாக கூர் தீட்டுவது ஒன்றே சரி யான தீர்வு என்பதை இளைஞரணி செயலா ளர் மிகத்தெளி வாகப் புரிந்து வைத்திருக் கின்றார்.

அவருக்கு முன்னே... ஆரிய சனாதனத் தின் மிகப் பெரும் போர்ப்படை அத்தனை அதி காரங்களுடனும், அயோக்கியத்தனங்களை செய்ய தயங்காத மனதுடனும் கொக்கரித்துக் கொண்டிருக்கின்றது..!

அதை வீழ்த்தி இந்த தமிழினத்தை காக்க வேண்டிய ஆகப் பெரும் பொறுப்பு கழக இளைஞரணியின் தோள்களில் தான் ஏற்றப் பட்டிருக்கின்றது..!

அதை இன்றைய இளைஞரணிச் செயலா ளரும்... அவரது தம்பிமார்களும் மிகச் சிறப் பாக செய்து முடித்து திராவிட இனத்தை காத்தி டுவார்கள் என்ற நம்பிக்கையோடு... இந்த நாற்பத்து ஐந்தாம் ஆண்டு இளைஞரணி விழா நாளில், நம் நெஞ்சார்ந்த வாழ்த்துக் களை அவர்களுக்கு வாரி வழங்குவோம்...!

---

## திருவாரூரில் மக்களுடன் நேர்காணல்

# பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினார்

*திருவாரூர், ஜுலை 22-*

*திருவாரூர் மாவட்டம், குடவாசல் வட்டம், அபிவி ருத்தீஸ்வரம் கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மக் கள் நேர்காணல் முகாமில் 194பயனாளிகளுக்கு ரூ.53 லட்சத்து 66ஆயிரத்து 27 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஶ்ரீ, மாவட்ட ஊராட்சி துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றியக்குழு துணைத்த லைவர் ஆர்.பாலச்சந்திரன் உள்ளிட்டோர் உடன் பங் கேற்றனர்.*

*முதல்வர் திராவிட நாய கர் தளபதி அவர்களின் வழி காட்டுதல்களின்படி மக்கள் நேர்காணல் முகாமானது ஒவ்வொரு மாதமும், ஒவ் வொரு வட்டம் வாரியாக தேர்வு செய்யப்பட்ட கிரா மத்தில் நடத்தப்பட்டு வரு கிறது. மக்கள் நேர்காணல் முகாமின் குறிக்கோளானது அரசு மூலம் செயல்படுத்தப் படும் திட்டங்கள் அனைத்து துறையின் துறை அலுவலர் கள் மூலம் மக்களுக்கு தெரி யப்படுத்துவதே ஆகும்.*

*அபிவிருத்தீஸ்வரம் வள வநல்லூர்,ஆர்பார் ஆகிய ஊராட்சிகளுக்கான மக்கள் நேர்காணல்முகாம் அபிவி ருத்தீஸ்வரம் கிராமத்தில் நடைபெற்றது. நடை பெற்ற மக்கள் நேர் காணல் முகாமில், வருவாய்த்துறை யின் சார்பில் 28 பயனாளிக ளுக்கு ரூ.13 லட்சத்து 44ஆயிரம் மதிப்பீட்டில் விலையில்லா வீட்டுமனைப் பட்டாவும், 81 நபர்களுக்கு ரூ.38 லட்சத்து 88 ஆயிரம் மதிப்பிலான இணையவழி வீட்டுமனைப் பட்டாவும், 04 நபர்களுக்கு பட்டாமா றுதல் ஆணை, உட்பரிவு ஆணையினையும், மாவட்ட வழங்கல் துறை யின் சார்பில் 45 பயனாளிக ளுக்கு புதிய குடும்ப அட் டையும், வேளாண்மை துறையின் சார்பில் 15 நபர் களுக்கு ரூ.27 ஆயிரத்து 720 மதிப்பில் மானிய விலையி லான இடுபொருட்களும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 4 நபர்களுக்கு மானிய விலையில் விதை, நாற்றுகளும், மாவட்ட சமூக நலத்துறையின் சார் பில் 8 பயனாளிகளுக்கு ரூ.49 ஆயிரத்து 224 மதிப் பீட்டில் இலவச தையல் இயந்திரமும், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை யின் சார்பில் 5 பயனாளிக ளுக்கு ரூ.33 ஆயிரத்து 450 மதிப்பிலான இலவச தையல் இயந்திரமும், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.23 ஆயிரத்து 633 மதிப்பி லான இலவச தையல் இயந் திரமும் என 194 பயனாளி களுக்கு ரூ.53 லட்சத்து 66 ஆயிரத்து 27 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங் கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் துணைத்தலைவர் சேகர் கலி யபெருமாள், ஒன்றியக்குழு துணைத்தலைவர் ஆர்.பால சந்தர், அபிவிருத்தீஸ்வரம் ஊராட்சிமன்றத்தலைவர் வெற்றிதாமரை சின் னையா, வளவநல்லூர், ஆர் பார் ஊராட்சிமன்றத்தலை வர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள் ளாட்சி அமைப்பின் பிரதிநிதி கள் கலந்து கொண்டனர்.*





காலை உணவுத் திட்டம் ஊரகப் பகுதியில் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் விரிவாக்கம் செய்யபட்டு, துவக்கி வைத்ததை தொடர்ந்து ஈரோடு மாவட்டம் அந்தியூர் ஊராட்சி ஒன்றியம் நகலூர் மற்றும் மைக்கேல் பாளையத்தில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் மாணவ, மாணவிகளுக்கு அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் துவக்கி வைத்தார். அதனை தொடர்ந்து அரசு கல்லூரியில் 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைகளை மாணவ, மாணவியரின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். நிகழ்வில் பேரூராட்சி தலைவர் பாண்டியம்மாள், துணை தலைவர் பழனிச்சாமி கல்லூரி முதல்வர் பொன்னுசாமி, உள்ளிட்ட பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.